திருச்சுழி சட்டமன்றத் தொகுதி, கே.வாகைக்குளம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பயணியர் நிழற்குடையை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் திருச்சுழி ஒன்றியப் பெருந்தலைவர் பொன்னுதம்பி, துணைத் தலைவர் மூக்கையன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

'கடைகளில் உரிமையாளர் பெயர்' எனும் உ.பி. - உத்தரகாண்ட் மாநில அரசுகளின் உத்தரவின் பின்னணி என்ன?

# ஆபத்தான மதவாதத்தை முறியடிக்க 'இந்தியா' கூட்டணி முன்வரட்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை, ஜூலை 21- உத்தரப்பிரதேசம், உத்தர காண்ட் மாநிலங்களில் வியாபாரநிறுவனங்களில் உரிமையாளர்களின் பெயர்களைப் போடவேண்டும் என்று பி.ஜே.பி. அரசுகள் உத்தரவு என்பது உரிமையாளர் ஹிந்துவா? முஸ்லீமா? என்று தெரிந்துகொள்ளவே! இந்த ஆபத்தான மதவாத வெறியை, இந்தியாகூட்டணி ஒருமித்த முறையில் இணைந்து முறியடிக்க முன்வர வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-**

'ஹிந்துத்துவா' என்று ஒரு நூற்றாண்டுக்குமுன் உருவாக்கப்பட்ட, ஹிந்து ராஜ்ஜிய - வருணதர்ம தத்துவத்தின் அரசியல் கோட்பாட்டை, செயல்முறைக்குக் கொண்டுவரும் "அரசியல் பரிசோதனைக் கூடமாக" சுமார் 25 ஆண்டுகளுக்குமுன், மோடி முதல்மைச்சராக ஆட்சி செய்த குஜராத் என்ற காந்திமண்ணையே தேர்ந்தெடுத்தது, சிறுபான்மையினருக்கு எதிராக ஒருவகை உளவியல், உடலியல் தாக்குதல் - இரண்டு துறைகளிலும் நடத்தப்பெற்றது. அது எல்லை தாண்டிய மதவெறித் தனத்தின் மதோன்மத நடனமாகி, ஆடியதன் தாங்கொணா கொடுமைகண்டு அன்றைய பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். பிரதமரான அடல்பிகாரி வாஜ்பேயி அவர்கள் அன்று இராணுவத் துறை அமைச்சராக இருந்த ஜார்ஜ் பெர்ணான்டஸ் அவர்களை நேரில் குஜராத்திற்கு அனுப்பி, வழிந்தோடிய இரத்தக் கண்ணீரைத் தடுக்க ஓரளவு முயற்சித்தார். அன்றைய குஜராத் முதல மைச்சர் நரேந்திர தாமோதரதாஸ் மோடி அவர்களுக்கு "ராஜ தர்மம்" என்று ஒன்று உள்ளது; அதனைக் கடைப்பிடித்து நடவுங்கள்" என்று அறிவுரை - அறவுரையை, ஆணையையும் வழங்கினார்!

"எந்த முகத்தை வைத்துக் கொண்டு வெளிநாடு செல்லுவேன்" என்று பிரதமர் வாஜ்பேயி புலம்பினார்!

**ஹிந்துத்துவாவின் பரிசோதனைக் கூடமா?**

ஆனால், கடந்த சில ஆண்டுகளாக குஜராத்தின் பழைய ஹிந்துத்துவ நடவடிக்கைகளுக்குப் பரிசோதனைக் கூடமாக உத்தரப்பிரதேசத்தினை ஆக்கிட, யோகி ஆதித்யநாத் என்னும் சாமியார் ஆட்சி பீடத்தில் அமர்ந்து ஹிந்துத்துவா தாண்டவம் தலைதெறிக்க ஆடிவரும் நிலைதான் இன்றைய நிலை!

சம்பூகனைக் கொன்ற இராமனது செயல் அன்று; இன்று இரண்டாவது பரிசோதனைக் கூடமாக (*Political Laboratory*) ஹிந்துத்துவாவுக்கு, பசுப் பாதுகாப்புப் படை தொடங்கினர். இப்போது கன்வார் யாத்திரை செல்லும்வழியில் உள்ள சிறு சிறு உணவுக் கடைகள் - தட்டிக் கடைகள் போன்று தள்ளுவண்டி கடைகளில் அதன் உரிமையாளர் யார்? என்று பெயர்ப் பலகை வைப்பது கட்டாயம் என்று உ.பி., உத்தரகாண்ட் மாநில அரசுகள் சட்ட ஆணைகளை வெளியிட்டுள்ளன!

**இதன் உள்நோக்கம் என்ன தெரியுமா?**

ஹிந்துக் கடையா? முஸ்லிம் கடையா? என்று தெரிந்துகொள்வதற்கான சூழ்ச்சி!

அது ஹிந்து கடையா? அல்லது முஸ்லீம்கள் மற்றும் சிறுபான்மையினர் கடையா என்று புரிந்துகொண்டு, ஹிந்துக்கள் அல்லாத முஸ்லீம்களின் கடைகளைப் புறக்கணித்துவிட்டு, ஹிந்துக்களின் கடைகளில் மட்டுமே வாணிபம் செய்ய வழிவகுக்கும் வெறுப்பு அரசியலின் விரிந்த - இழிந்த செயலின் மறைமுக ஏற்பாடு என்று பல முற்போக்காளர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர். இது ஹிந்துத்துவா வெறித்தனத்தின் கோர முகத்தை வெளிச்சம் போட்டுக்காட்டி வருகிறது!

அரசமைப்புச் சட்டம் கூறும் மதச்சார்பின்மை, ஜீவாதார உரிமைகள் எல்லாம் எங்கே, எங்கே? புதைக்கப்பட்டு விட்டதா?

நீரில் கரைந்தவையாகி வருகின்றனவா?

கூட்டணிக் கட்சிகளே எதிர்க்கின்றனவே!

மற்ற எதிர்க்கட்சிகளின் கண்டனம் ஒருபுறம் என்றாலும், அவர்களது சொந்தக் கட்சியான பா.ஜ.க. வினரும், இன்றுள்ள மைனாரிட்டி பா.ஜ.க. அரசினைத் தாங்கிப் பிடித்துவரும் தேசியஜனநாயகமுன்னணி கட்சிகளான அய்க்கிய ஜனதா தளம், ராம்விலாஸ் பஸ்வான் கட்சியான லோக் ஜனசக்தி கட்சி, சிராக் பஸ்வான் கட்சிகளும், பா.ஜ.க.வின் முஸ்லிம் ராஷ்ட்ரிய மஞ்ச் அமைப்பின் தலைவர் மேனாள் அமைச்சர் சையத் நக்வி போன்றவர்களும் கூட எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அரசமைப்புச்சட்டத்தை முன்பு மோடி, தலைகவிழ்ந்து வணங்கியதெல்லாம் இப்படி ஆளுமை செய்வதற்குத்தானா? என்ற கேள்வி நாடு முழுவதும் எதிரொலிக்கத் தொடங்கிவிட்டது!

இந்தியா கூட்டணியின் மகத்தான பொறுப்பு! இத்தகைய ஹிந்துத்துவ மதவெறியின் கோர முகத்தை மாற்றிட, கட்சி, ஜாதி, மதம், மாநிலம் என்று ஒருங்கிணைந்து போராடி, அது புறமுதுகிட்டு ஓடும் நிலையை உருவாக்க வேண்டியது எதிர்க்கட்சியாகிய இந்தியா கூட்டணியின் பொறுப்பு மாத்திரமல்ல - அனைத்து மனிதநேயர்களின் இன்றியமையாப் பெருங்கடமையாகும்!

வெறுப்பு அரசியலை விரட்டியடியுங்கள் -

பொறுப்பு கூட்டு சமூக எழுச்சியே அதற்குரிய சரியான கருவியாகும்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் தொகுதியில் பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் வெப்படையில் 45 ஆவது துவக்க விழாவை முன்னிட்டு 60 அடி கொடிக் கம்பத்தில் கழக நிறுவனக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார். விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கழக இரு வண்ண கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நடனசபாபதி, பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய செயலாளர் ஆர்.செல்வம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நிகழ்ச்சி!

# தி.மு.க.வின் கொள்கைகளை - திராவிட மாடல் ஆட்சியை மக்களிடம் கொண்டு சேர்ப்போம்!

## வெப்படையில் நடைபெற்ற கொடியேற்று விழாவில் அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் பேச்சு!

நாமக்கல், ஜூலை 22- முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் 1980 ஜூலை 20 ஆம் தேதி ஜான்சி ராணி பூங்காவில் தி.மு.க. இளைஞரணி தொடங்கப்பட்ட நாளை நினைவு கூறும் வகையிலும் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக சார்பில், திருச்செங்கோடு, மல்லசமுத்திரம், காளிப்பட்டி, குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் கழக இரு வண்ணக் கொடி ஏற்றும் விழா நடைபெற்றது.

நாமக்கல் மேற்கு மாவட்டம் குமாரபாளையம் தொகுதியில் பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய திமுக மற்றும் இளைஞர் அணி சார்பில் வெப்படையில் 45 ஆவது துவக்க விழாவை முன்னிட்டு 60 அடி கொடிக் கம்பத்தில் கழக கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் நடனசபாபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளிபாளையம் மத்திய ஒன்றிய செயலாளர் ஆர். செல்வம் வரவேற்புரை ஆற்றினார்.

விழாவில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு கழக இரு வண்ண கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில், பேரறிஞர் அண்ணா வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்து வந்தார். அவரது வழியில் தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே முதன் மாநிலமாக, முன்னோடி மாநிலமாக திராவிட மாடல் ஆட்சி நடத்தி வருகிறார். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்தியாவிலேயே 40க்கு 40 தொகுதிகளை வென்ற ஒரே கட்சி திராவிட முன்னேற்ற கழகம். அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் ஏழை, எளிய, நடுத்தர மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்காகவும், நலனுக்காகவும் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயலாற்றறி வருகிறார். இளைஞர் அணி தோழர்கள் திராவிட மாடல் ஆட்சியையும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செயல்பாட்டையும் ஒவ்வொரு கிராமங்களிலும் வீடு வீடாக மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். அதற்கான பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூண்களாக இருப்பது பகுத்தறிவு, சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம்.

இந்த 4 முக்கியமான தூண்களால் எழுப்பப்பட்ட கோட்டை தான் திராவிட முன்னேற்ற கழகம். இந்த கோட்டையின் தலைவர்கள் தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தமிழ்நாட்டின் அடையாளம் இந்தியாவின் அடையாளம் தமிழர்களின் அடையாளம் உலக தமிழர்களின் பெருமை நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத் தலைவராக பொறுப்பேற்ற திலிருந்து தொடர்ந்து வெற்றிகளை குவித்து கொண்டே வருகிறார். தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை காக்கிற ஒரே இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம். வருங்காலம் இளைஞர்களின் கையில் உள்ளது. இளைஞர்கள் வழிநடத்த வேண்டும். கழக இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழியில் திமுகவின் கொள்கைகளையும், செயல்பாடுகளையும் மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் பணியில் இளைஞர் அணியினர் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும். கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் இளைஞர்களும் இணைந்து இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெருமையை நிலை நாட்டோம் என்று அமைச்சர் மா.மதிவேந்தன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நாச்சிமுத்து, இளங்கோவன், நகர கழகச் செயலாளர்கள் குமார், விஜய்கண்ணன், ஞானசேகரன், பொதுக்குழு உறுப்பினர் ஓ ஆர் செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர்கள் கார்த்திக்ராஜ், ராமமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் முரளி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வி.ஜெ.உமா மகேஸ்வரன் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி சார்பில் மரக்கன்றுகள் நடல்!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தொடங்கி வைக்கிறார்!

திருவள்ளூர், ஜூலை 22 திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞரணி திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 50,000 மரக்கன்றுகள் நடுதல் விழா இன்று (22072024 திங்கள் கிழமை) காலை 10 மணி அளவில் புல்லரம்பாக்கம் கிராமத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.ஜெ. உமா மகேஸ்வரன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இதில் ஒன்றிய கழகச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன் வரவேற்புரையற்றிகிறார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்குமார், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி மா.செ. ராஜேஷ், தெ.பிரியாகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமை தாங்கி மரக்கன்று நடும் நிகழ்ச்சி துவக்கி வைக்கிறார்.

இதில் மாநில ஆதிதிராவிட நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி. ஜெரால்டு மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊராட்சி கிளை கழக நிர்வாகிகள், இளைஞர் அணி சார்ந்த தோழர்கள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

## காவிரியில் நீர் திறப்பு அதிகரிப்பு:

# மேட்டூர் அணை நீர்மட்டம் - ஒரே நாளில் 7 அடி உயர்வு!

சேலம், ஜூலை 22- கர்நாடகாவில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து வருகிறது. இதன் காரணமாக அங்குள்ள நீர்நிலைகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. கடலோர மாவட்டங்கள் மற்றும் மலை மாவட்டங்களில் வெளுத்து வாங்கும் மழையின் காரணமாக பல்வேறு பகுதிகள் வெள்ளக்காடாக காட்சி அளிக்கிறது. குடகு மாவட்டத்தில் தயார் நிலையில் பேரிடர் மீட்பு குழுவினர் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் அங்குள்ள பல்வேறு ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் காவிரி மற்றும் பல்வேறு ஆறுகளின் கரையோரத்தில் வசிக்கும் பொதுமக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பு அதிகரித்து காணப்படுவதால் தமிழக எல்லையான பிலிகுண்டு பகுதிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக ஒகேனக்கல் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது. இந்த தண்ணீர் நேரமாக காவிரி ஆற்றில் மேட்டூர் அணைக்கு வந்து கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் கிடுகிடு வென உயர்ந்து வருகிறது.

காவிரியில் நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 7.6 அடி உயர்ந்துள்ளது. ஒரே வாரத்தில் 26.15 அடி உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் நீர் வரத்து வினாடிக்கு 68,843 கன அடியாக இருந்த நிலையில், நேற்று காலை நிலவரப்படி 71,777 கன அடியாக வந்து கொண்டிருக்கிறது.

எழும்பூர் தொகுதி வடக்கு பகுதி முன்னாள் மாவட்ட வழக்கறிஞரணி துணை அமைப்பாளர் விஜய் போஸின் இல்லத் திறப்பு விழாவில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் – எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் கலந்து கொண்டார்.

## கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தி.மு.க. அயலக அணி சார்பில்

# பாலூரில் - கலைஞர் நூற்றாண்டு நிறைவு திருவிழா!

நாகர்கோயில், ஜூலை 22- கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் பாலூர் ஆசான் அரங்கில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா 21.07.2024 அன்று மாலை நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுமார் எழுபது அரசு பள்ளி மாணவர்களுக்கு தி.மு.க. மேற்கு மாவட்ட அயலக அணி சார்பில் கல்வி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

மாவட்ட அயலக அணி அமைப்பாளர் பாலூர் தேவா விழாவுக்கு தலைமை ஏற்று அயலக அணியின் செயல்பாடுகள் குறித்து விளக்கவுரை ஆற்றினார். நலத்திட்ட உதவிகளுக்கான ஏற்பாடுகளை செய்த தலைமை செயற்குழு உறுப்பினர் ரெமோன் மனோதங்கராஜ் மற்றும் கழக முன்னோடிகளுக்கு நன்றி பாராட்டப்பட்டது.

சிறப்பு விருந்தினர்களாக சவுதி அரேபியாவில் இருந்து சமூக சேவகர் மற்றும் NRTIA அமைப்பாளர்களுமான மயிலாடுதுறை வெங்கடேஷ், திருச்சி ஆரிப் மக்பூல் மற்றும் பிரான்ஸ் நாட்டு தமிழ்ச்சங்க துணைத் தலைவர் ஜெகனாத் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மாவட்ட தி.மு.க. அயலக அணி தலைவர் திருவை நசீர் அவர்கள் நன்றி கூறினார். குழித்துறை அயலக அணி அமைப்பாளர் தாணு பிள்ளை வரவேற்புரை ஆற்றினார்கள். அயலக அணி ஒன்றிய அமைப்பாளர்கள் சேவியர் மற்றும் எட்வின் தங்கம் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்கள். அயலக அணி துணை அமைப்பாளர்கள் திருமதி. கில்டா மோகன்தாஸ் மற்றும் திருமதி. பொன் பத்மா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள்.

ஒன்றிய செயலாளர்கள் டி.பி. ராஜன், கோபால், அட்வக்கேட் ராஜேஷ்குமார், அட்வக்கேட். ஜாண் பிரைட், மாஸ்டர் மோகன், அருளானந்தராஜ், அட்வக்கேட். ஜாண்சன், ஷைனி கார்டன், அட்வக்கேட். றாபி மற்றும் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணி நிர்வாகிகள் சுனிதா சத்தியராஜ், கிஷோர், ஜாண்கிளின், கவாஸ்கர் தக்கலை ரவி, மஸ்கட் செல்வகுமார், எட்வின் ஜோஸ், ஷாஜி, ஷஜின், மோகன்தாஸ், மஸ்கட். சாஜி தியோடர், சுரேஷ்குமார், ஸ்னேகா மற்றும் நகரச் செயலாளர்கள் ரமேஷ், வினுகுமார் ஆகியோருக்கு அயலக அணி சார்பில் நினைவு பரிசுகள் வழங்கப்பட்டது.

மாவட்ட அவைத்தலைவர் சிசுகுமார், மாவட்ட பொருளாளர் ததேயு பிரேம்குமார், பேரூர் செயலாளர் சத்தியராஜ், பேரூராட்சி தலைவிகள் ஷீலா, சத்தியராஜ், மனோஜ், துரைராஜ், தங்கதுரை, சரளா கோபால் ஊராட்சித்தலைவர் அஜித்குமார் அணிகள் சார்பாக ஜீட்தேவ், ரெனிட் டஸ், சுரேஷ்குமார், அமல்ராஜ் மற்றும் குவைத் ஆல்பின், சோழராஜன், பின்ஸ், அனைத்து குமரி மேற்கு மாவட்டத்தை சார்ந்த பேரூர் செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், ஒன்றிய நகர பொறுப்பாளர்கள், மாணவ மாணவிகள், பொதுமக்கள் என திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கூட்டத்தில் அணி அமைப்பாளர் பாலூர் தேவா கொண்டு வந்த தீர்மானங்களை அனைவரும் கர ஒலி எழுப்பி நிறைவேற்றினர்.

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட அயலக அணி சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. அயலகத்தில் வாழும் இந்திய தமிழர்கள் அகால மரணமடைந்து அவர்களது உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கும் போது ரூ. 1,00,000 உடனடியாக நிவாரணமாக வழங்கி அரசு உதவ வேண்டும்.

2. மேற்கூறிய தீர்மானத்தின் தொடர்ச்சியாக இந்த மாதத்திலிருந்து குமரி மாவட்டத்தை சார்ந்து அயலகத்தில் மரணமடையும் தமிழர்களுக்கு அமல்படுத்த, ஆவன செய்ய அமைச்சர் அவர்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

3. கடந்த மூன்று ஆண்டுகளாக அரசு அயலக தமிழர் நல வாரியம் அமைத்து நடைமுறை படுத்தி வருகிறது. ஆனாலும் அரசு அறிவித்த நலத்திட்டங்கள் இது வரை துவங்க படவில்லை. கடந்த மூன்று ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பலர் அயலகத்தில் அகால மரணமடைந்து, தாயகம் கொண்டு வந்து அடக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள். அந்த குடும்பத்தினருக்கு சேர வேண்டிய நிவாரணங்களை அரசு வழங்கிட வேண்டுமென கேட்டு கொள்ளப்படுகிறது.

4. குமரி மாவட்ட தொழிலாளர்கள் சிலர் அயல் நாடுகளில் சட்ட விரோத செயல்பாடுகளில் ஈடுபட்டு நீண்டகால சிறை வாசத்தில் சிக்கி கொள்கிறார்கள். அதனால் அவர்களின் இளவயது மனைவி மற்றும் சிறு குழந்தைகள் வாழ்வாதாரத்தை இழந்து செய்வதறியாது திகைத்து நிற்கின்றார்கள். இக்குடும்பத்தவருக்கு, கணவர் திரும்பி வரும்வரை அரசு உதவித்தொகை அளித்து, ஆதரவு அளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.